27 APR 1961
STATE LEGISLATURE

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, the 22nd August 1960

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Houses for Policemen

*248 *Q.*—SRI M. A. B. ARUMUGHASAMY: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லாவில் எங்கெங்கு போலீஸ்காரர்களுக்கு வீடுகள் கட்ட முடிவு செய்யப்பட்டிருக்கிறது ?

(ஆ) எத்தனை வீடுகள் ?

(இ) எவ்வளவு செலவில் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ) to (இ) A statement [a] is placed on the Table of the House.

Wall-posters

*251 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சுவரெட்டி விளம்பரங்களை யெல்லாம் சர்க்காராலோ அல்லது பஞ்சாயத்து போர்டு முனிசிபாலிடி கார்ப்பொரேஷன் மூலமாகவோ குறிப்பிடப்படும் இடங்களில் மட்டும்தான் ஒட்டப்படவேண்டுமென்று சட்டமியற்றப்படுவது பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

Arecanut

*261 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர், ஜில்லா கோபிசெட்டிப்பாளையம் தாலூகா, தளவாடி, மலைப் பிரதேசத்தில் பாக்கு உற்பத்திக்கான திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதா ?

(ஆ) அப்படியானால் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

---

[a] Printed as Appendix I on page 401 *infra*.

SRI P. G. MANICKAM: பவானிசாகர் வட்டார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தாளவாடி மலைப் பகுதியில் பாக்கு உற்பத்தி செய்வது பற்றி பரிசீலனையின் விவரம் சர்க்காருக்கு அறிவிக்கப் பட்டதா? அறிவிக்கப்படாவிட்டால், என்ன பரிசீலனை நடந்தது என்று அமைச்சர் அவர்கள் விசாரிப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: விவசாய இலாகாவிலோ அல்லது காட்டிலாகாவிலோ அம்மாதிரி ஒன்றும் யோசனை இல்லை. வேறு தகவல் அரசாங்கத்திடம் இல்லை.

Beggars

*271 Q.—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) "The Madras Prevention of Begging Act, 1945" எந்தெந்த நகரங்களிலே அமுலில் இருக்கிறது?

(ஆ) இதுவரை எத்தனை பிச்சைக்காரர்கள் பிச்சை எடுப்பதிலிருந்து தடை செய்யப்பட்டார்கள்?

(இ) தடை செய்யப்பட்ட பிச்சைக்காரர்களுக்கு என்னென்ன விதமான உதவிகளும், தொழில்களும் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The list [a] of places to which the provisions of the Madras Prevention of Begging Act, 1945, have been extended, is placed on the Table of the House.

(b) The particulars are not furnished as the time and labour involved in collecting them from 1945 onwards will not be commensurate with any public interest that is likely to be served.

(c) The following handicrafts are tought to the inmates of the Begger Homes in mofussil:—

(1) Spinning.

(2) Weaving.

SRI P. G. MANICKAM: பிச்சைக்காரர்கள் தொல்லை பஸ் ஸ்டாண்டிலும் ரயில்வே நிலையங்களிலும் அதிகமாக இருப்பது பற்றி ஒரு சில நாட்களுக்கு முன்பு நான் ஒரு கேள்வி கேட்ட போது, அமைச்சர் அவர்கள், "கவனிக்கப்படும்; சட்டம் திருத்தி ஒழுங்கு செய்யப்படும்" என்று சொன்னார்கள். இந்தச் சட்டத்தை பஸ் ஸ்டாண்டு, ரயில்வே நிலையங்கள் இவைகளுக்கும் பொருந்தும்படி திருத்த அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்பொழுது அமுலில் இருக்கும் சட்டத்தைத் திருத்துவது பற்றி அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது.

---

a Printed as Appendix II on page 402 infra.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS